## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம் - 2015

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் 17(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அனுமதி வழங்கப்பட்டவைகள் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிரீடு செய்ய முடியாதிருந்த போதிலும் யப்பான் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக எதிர்வரும் வருடத்திற்காகக் கிடைத்த ரூபா 166,000 தொகை பெறவேண்டிய கணக்குகளின் மீதியில் கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாடநெறி வருமானங்களை இனங்காணும் போது நிறுவகத்தால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டில் டிப்ளோமா பாடநெறி வருமானத்தில் முன்னைய ஆண்டிற்காகவும் எதிர்வரும் வருடத்திற்காகவும் கிடைத்த ரூபா 2,000,000 தொகையான பாடநெறிக் கட்டணம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க மானியக் கணக்கு வைப்பு தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டு வரை தொழிலாளர் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் ஊடாக நிறுவகத்திற்குக் கிடைத்த மீண்டெழும் மற்றும் மூலதன மானியம் அனைத்தும் நடைமுறை வருமானமாகக் கருதி மீளாய்வாண்டின் போது அது நிதி நிலைமை கூற்றில் உரித்தொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டிற்காக அமைச்சு மீளளிப்புச் செய்த மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்கள் முறையே ரூபா 610,677 உம் ரூபா 4,913,270 உம் மற்றும் மீளாய்வாண்டிற்காக மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களில் முறையே ரூபா 3,421,259 தொகையும் ரூபா 585,885 தொகையும் உரிய பிரகாரம் இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் போது பல்வேறு நிறுவனங்களில் இருந்து கிடைத்து அமைச்சுக்கு அனுப்பப்பட்ட ரூபா 267,500 தொகை பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அது நிறுவகத்தின் கணக்குகளில் வைப்பாக கணக்கீடு செய்யப்பட்ட போதும் அது பொதுத் திறைசேரியின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

2014 சனவரி முதல் 2015 திசெம்பர் வரை விதவைகள், அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்பான ரூபா 143,151 தொகை மற்றும் தொழில் திணைக்களத்திற்கு மீளளிப்பு செய்யப்பட வேண்டிய ரூபா 1,170,961 தொகை என்பன கணக்காய்வுத் திகதியான 2016 மே 04 ஆந் திகதி வரையிலும் உரிய நிறுவனத்திற்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 2/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் முன்னைய ஆண்டின் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2016 மே 04 ஆந் திகதி வரையும் 2015 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 7,086,785 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,441,777 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,354,992 வீழ்ச்சியொன்றைக் காண்பித்திருந்தது. திறைசேரி மீண்டெழும் பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது முன்னைய ஆண்டில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை மாற்றப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 15,406,726 கூட்டுத்தொகையான மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்கள் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாக இனங்காணப்படாமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும், நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்துவரும் மிகையொன்று காணப்பட்டது. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அரசாங்க மானியக் கணக்கு வைப்பு ஒரேசீராக இல்லாமையின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டின் நிதி விளைவில் வீழ்ச்சியொன்று ஏற்பட்டிருந்தது. ஊழியர் ஊதியம், ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் அரச வரிகள் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 4,767,579 தொகையான நிறுவகத்தின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டு வரை சீராக அதிகரித்திருந்தது. 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 27,381,220 தொகையான பங்களிப்பு 2015 ஆம் ஆண்டின் போது 42 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும்

சுகாதாரம் தொடர்பான தேசிய கொள்கையொன்றைத் தயாரிக்கும் சகல செயற்பாடுகளின் போதும் உரிய அமைச்சருக்கு உதவியாக இருத்தல், தேவையான கற்கை ஆராய்ச்சிகள் மற்றும் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு நிலை, சுகாதார மற்றும் நலன்புரி தொடர்பான கல்வி, பயிற்சியளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டுதல் போன்ற சகல நிகழ்ச்சித் திட்டங்களையும் அமுல்படுத்துதல் நிறுவகத்தின் பிரதான நோக்கங்களாகும்.

மீளாய்வாண்டின்போது நிறுவகத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் மற்றும் அவற்றை நிறைவேற்றுதலின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த 03 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கூறப்பட்ட நிறுவகத்தின் நோக்கங்களுக்கிடையே அனேகமானவற்றின் நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்**

நிறுவகம் ஆரம்பிக்கப்பட்டது முதல் 2 டிப்ளோமா பாடநெறிகளும், 03 சான்றிதழ் பத்திர பாடநெறிகளும் நடாத்தப்பட்டு சான்றிதழ் பத்திரம் கையளிக்கப்பட்டிருந்த போதும், அந்த பாடநெறிகளுக்கு விண்ணப்பித்த மற்றும் வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழ் பத்திரங்களை உரித்தாக்கிக் கொண்ட மாணவர்கள் தொடர்பான தரவு முறைமையொன்று பேணப்படாமையினால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ் பத்திரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளும் போது நிறுவகம் ஏதாவது ஒழுங்குமுறையற்ற நிலைக்கு இடமளித்திருந்தமையும் அதன் மூலம் மோசடிகள் ஏற்படுவதற்கு அவகாசம் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

**4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 10 வருட காலம் முதல் கூட்டுமொத்தமாக ரூபா 5,644,437 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் கட்டிடத்தின் உரித்தைக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டு இலக்கிடப்பட்ட வருமான அதிகரிப்பிற்கு பாடநெறிக் கட்டண அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்ததுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

நிறுவகத்தால் மேற்கொள்ளப்பட்ட சுற்றாடல் அளவிடைகள் தொடர்பான பரீட்சிப்பிற்கான வளப் பங்களிப்பை வழங்குவதற்காக தேசிய சம்பள மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் பரிந்துரையுடன் பொது நிர்வாகம், முகாமைத்துவ அமைச்சின் அங்கீகாரமின்றி ரூபா 166,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

சிரேஷ்ட மற்றும் மூன்றாம் நிலையில் 06 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 14 உத்தியோகத்தர்களுக்காக வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படாமையினால் நிறுவகத்தின் நோக்கங்களை உரிய பிரகாரம்

நிறைவேற்றுவதில் கஷ்டங்கள் ஏற்பட்டிருந்தது. இந்த வெற்றிடங்கள் தொடர்பாக முன்னைய ஆண்டுகளிலும் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 உபபிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் குழுக்கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(உ) இன் பிரகாரம் அது ஆறு மாத காலத்தை விஞ்சாத காலத்தினுள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.4 மற்றும் 3.6 ஆம் பிரிவுகளின் திருத்தங்களுக்குரிய 2014 யூலை 04 ஆந் திகதிய மேலதிகம் 28 இன் பிரகாரம் விலை ஒப்பீட்டு முறையின் கீழ் ஆகக் குறைந்தது மூன்று கூறுவிலைகள் பெற்று கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டிய ரூபா 214,000 ஆன பிளாஸ்டிக் கதிரைகள் மற்றும் மேசைகளைக் கொள்வனவு செய்யும் போது அதற்கு முரணானதாக ஒரு கூறுவிலையினை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 5.3 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புகள் |
| --- | --- | --- |
| (அ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்காக போதியளவான உபாய வழிகள் பயன்படுத்தப்படாமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாமை |
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) | நிலையான சொத்துக்களின் நிர்வாகம் | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை |